**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | | |
|---|---|---|
| Calendar Case No: | | CC. 362/2019 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | | அ.சா.2 |
| Name | : | திரு. முஹம்மது நாசர் |
| Father's Name/Husband Name: | | திரு. அப்துல்ஹக்கீம் |
| Village | : | குரும்பலூர் |
| Taluk | : | பெரம்பலூர் |
| Age | : | 39/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 08.06.2026

**(1969–ம் ஆண்டின் 54வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. S. தினேஷ், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**
**( எதிரி சம்சாத் ஆஜர்)**
**முதல் விசாரணை**

நான் தற்போது குரும்பலூர் கிராமத்தில் வசித்து தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனது சித்தி. சுமார் 5 வருடங்களுக்கு முன்பு நான் வெளியிலிருந்த போது அ.சா.1 எனக்கு போன் செய்து வீட்டின் பூட்டை உடைத்து பீரோவில் வைத்திருந்த நகைகளை யாரோ திருடிச் சென்றதாக தகவல் சொன்னார். தகவல் தெரிந்து நான் அ.சா.1ன் வீட்டிற்கு சென்று பார்த்தேன். சுமார் 5 பவுன் திருட்டு போயிருந்ததாக தெரிந்து கொண்டேன். யார் திருடினார்கள் என்று எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது**
**அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை**

போலிசார் விசாரிக்கும் போது பர்தா அணிந்து வந்த பெண் தான் அ.சா.1ன் வீட்டிற்குள் புகுந்து நகைகளை திருடிச் சென்றதாக போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரி தான் அ.சா.1ன் வீட்டில் நகைகளை திருடிச் சென்றதாக நான் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

இவ்வழக்கின் எதிரிகளை நான் பார்க்கவில்லை என்றால் சரிதான்.

**மறு விசாரணை : இல்லை**

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-xxxxxxxx
Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.